2014 பிப்ரவரி 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். மனோகர், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

56—

பகுதிநேர நியாய விலைக் கடை

***21845—திரு. பி.ஆர். மனோகர்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், தச்சம்பட்டறை கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைப்பதற்கு அரசின் வழிகாட்டி விதிமுறைகள் பூர்த்தியாகாத காரணத்தினால், வேலூர் மாவட்டம், சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், தச்சம்பட்டறை கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். மனோகர், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வீரக்கல்புதூர் பேரூராட்சி, 4-வது வார்டில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட நியாய விலைக் கடை இதுவரை திறக்கப்படவில்லை. அந்தக் கடையைத் திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2014 பிப்ரவரி 17

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிகள் முழுமையாக நிறைவேறியவுடன் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆசியோடு கடை திறந்துவைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

57—

கால்நடை மருத்துவமனை

***20535—திரு. கே.பி. நாகராஜன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, மயிலம் ஊராட்சி ஒன்றியம், நெடமோழியனூரில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதியிலே, நெடிமோழியனூர் கிராமத்திலே, ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா என்று உறுப்பினர் கேட்டிருக்கிறார். அங்கே கால்நடைத் துறையினுடைய விதிகளுக்குட்பட்டு, ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்ற காரணத்தினால், மனிதனுக்கு இணையாக கால்நடைகளுக்கும் மருத்துவம் பார்க்கவேண்டுமென்ற அம்மா அவர்களின் ஆட்சியினுடைய இலட்சியத்தின் அடிப்படையிலே (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே கால்நடைக் கிளை நிலையம் ஒன்று நிச்சயமாக அமைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.